மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
11 JUL 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 11 - 7 - 1997 இதழ்: 16

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்'

நீதிமொழிகள் 14. 27

## இலங்கை கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில்

## ஆழ் நிலைத் தியானக் கருத்தரங்கு!

கடந்த 28 - 06 - 97 இல் இ. கி. இ. கல்லூரியில் 'கிறிஸ்தவ ஆன்மீகம்' என்ற பொருளில் ஆழ்நிலைத் தியானக் கருத்தரங்கு ஒன்று மாணவர் நலன்துறைக் காப்பாளர் அருட்திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருட்பிதா. ஜெயசீலன் அடிகளார் சிறப்புச் சொற்பொழிவு, வேதப் படிப்பு என்பவற்றில் அவையோரை வழிநடத்தினார்.

மேற்படி கருத்தரங்கு கல்லூரியின் செபமண்டபத்தில் நடைபெற்றது. திருமதி ஜீவா இரத்தின சபாபதி அவர்கள் தேவாரம் ஒன்றைப்பாடினார். செபங்களை அருட்திரு. ஏ. வி. யேசுதாசன், அருட்திரு. வி ராஜ்குமார் ஆகியோர் செய்தனர். கூட்டத்துக்கு வந்த அனைவருக்கும் தியானத்துக்கான பிரதிகள் தட்டச்சுச் செய்து கொடுக்கப்பட்டது. வட்டுக் கோட்டை ஆண்கள் இல்ல இளைஞர்கள் இசைக்கருவிகளை மீட்டி பாடல்களை மெருகூட்டினார்.

அருட்பிதா. ஜெயசீலன் அடிகளார் தனது சொற்பொழிவில் "கோணலான மானிடவரிகளைக் கொண்டு நேரான வரிகளை வரைபவரே இறைவன். எமக்கு லௌகீகமே முக்கியம் என்றும், ஆன்மீகம் 'ஊழியர்' என பிரத்தியேகப் படுத்தப்பட்டவர்களுக்கே தேவை என்றும் கூறுபவர்கள் உள்ளனர். ஆனால் ஒவ்வொரு மனிதரும் ஆன்மீகத்துக்கென அழைக்கப்படுகின்றனர். மனிதருள் மாற்றமுடியாத, விலகிப்போக முடியாத ஒன்றே ஆன்மீகம். ஆதிமனிதனும் பல குறியீடுகளால் தனக்குள் ஆன்

(4ம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத் திருச்சபையின் தேவை

பண்டத்தரிப்பு திருச்சபை திரும்பவும் மறுமலர்ச்சி பெற்று இயங்கி வருகிற இவ்வேளையில்;

யாழ். நகர்ப்புறத் திருச்சபையில் பாவித்து வந்த பண்டத்தரிப்புத் திருச்சபையின் தளபாடங்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றன. இந்நிலையில் யாழ்ப்பாணத் திருச்சபையில் பாவிப்பதற்கென தளபாடங்கள் தேவைப்படுவதாகவும் அவற்றை விற்க விரும்புவோரைத் தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறும்யாழ்ப்பாணத் திருச்சபையினர் தெரிவித்தனர்.

### மட்டக்களப்பில் பொன்விழாவும் திடப்படுத்தலும்

கடந்த 15 - 06 - 97 அன்று மட்டக்களப்பு பரியோவான் ஆலயத்தில் பேராயர் அருட்பெருங் கலாநிதி. எஸ் ஜெபநேசன் அவர்களால் 64 பேர் திடப்படுத்தல் பெற்றனர். அதன்பின்பு தென்னிந்தியத் திருச்சபையின் பொன் விழாவை ஒட்டி ஒரு பகிரங்கக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு ஆலயக்குரு அருள்திரு. எஸ். ஜெயநேசன் தலைமைதாங்கினார்.

விசேட சொற்பொழிவுகளினை பேராயர் எஸ். ஜெபநேசன்; ரோமன் கத்தோலிக்கக்குரு அருட்பிதா. தேவசகாயம்; இலங்கைத் திருச்சபைக்குரு அருள்திரு. இயேசுதேவா; இரட்சணிய சேனையின் கப்டன். தேவசகாயம்; மட்டக்களப்பு அரச அதிபர் திரு. எஸ். பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

### பிள்ளைகள் விழா

இவ்வாண்டினது பிள்ளைகள் விழாவினை 12-07-97 இல் உடுவில் மகளிர் கல்லூரியில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இது முழுநாள் விழாவாக நடைபெறும். பிரயாண நேரத்தினை கருத்திற் கொண்டு விழாவினை முடிக்க சமயக் கல்விக்குழுவினர் ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளனர்.

### பேராலயம் புனரமைப்பு

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் வட்டுக் கோட்டைப் பேராலயம் புனரமைப்புச் செய்யப் பட்டு வருகிறது

இப்புனரமைப்பிற்கான செலவினை யாழ்ப்பாணக் கல்லூரியும் வட்டுக்கோட்டைத் திருச்சபையாரும். யாழ். ஆதீனமும் இணைந்து தாங்கிவருகின்றனர் எனத் தெரிய வருகின்றது. இப் புனரமைப்புப் பணியினால் பேராலயம் புதுப் பொலிவு நிறைந்ததாக மாறி வருகின்றது.

### 26வது ஆண்டு நிறைவு!

முன்னாள் பேராயர் அருட்பெருங் கலாநிதி. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் பேராயராகத் திருநிலைப்படுத்தப் பட்டு சென்ற 30-06-97 ல் 26 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதை முன்னிட்டு விசேட ஆராதனை ஒன்று மானிப்பாய்த் திருச்சபையில் நடைபெற்றது. முன்னாள் பேராயரும், அருட்திரு. ஏ. வி. ஜேசுதாசன் அடிகளாரும் இவ் வாராதனையை நடாத்தினர். நமது முன்னாள் பேராயர் அவர்களுக்கு "உதயதாரகை" யின் வாழ்த்துக்கள்.

### நெடுந்தீவில் நிகழ்ந்தவை!

நமது முன்னாள் பேராயர் அருட்பெருங் கலாநிதி டி ஜே. அம்பலவாணர் அவர்கள் திட்டப்பணிப் பாளர் திரு. எஸ். மித்திரரஞ்சன் அவர்களுடன் இணைந்து சென்ற மாதம் நெடுந்தீவிற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டது நாம் அறிந்ததே. அப்போது நெடுந்தீவில் நிகழ்ந்தனவற்றை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

#### வரவேற்பு

முன்னாள் பேராயர் அவர்கள் 19 - 6 - 97 இல் நெடுந்தீவினைச் சென்றடைந்தார். இறங்கு துறையில் மாலை அணிவிக்கப்பட்டு, அங்கிருந்து பவனியாக ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஓர் ஐக்கிய தேநீர் விருந்து நடைபெற்றது.

#### விளையாட்டுப்போட்டி

நெடுந்தீவு பகல் பராமரிப்பு நிலையத்தினது விளையாட்டுப் போட்டி 21 - 6 - 97 இல் நிலைய முன்றலில் நடாத்தப்பட்டது. முன்னாள் பேராயர் அவர்களே பிரதம விருந்தினராகப் பங்குகொண்டார்.

#### தொழிற் பயிற்சி நிலையம்

நாட்டின் சூழ்நிலை காரணமாக நெடுந்தீவு தொழிற்பயிற்சி நிலையம் கடந்த ஐந்து வருடங்களாக இயங்க முடியாமல் இருந்தது. 22 - 6 - 97 இல் நமது முன்னாள் பேராயரால் இது மீளங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

#### சேவை நலன் பாராட்டு

22 - 6 - 97 இல் இன்னொரு விழாவும் நடத்தப்பட்டது. சபை மக்களும் கிராமத்தவரும் முன்

(4ம் பக்கம் பார்க்க)

### முன் போட்டிகள்

தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தின் சமயக் கல்விக் குழு எதிர்வரும் 12-07-97 இல் நடாத்த இருக்கும் பிள்ளைகள் விழாவுக்காக இறுதிப்போட்டிக்கான தெரிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு சென்ற 5-7-97இல் உடுவில் மகளிர் கல்லூரியில் முன் போட்டிகள் நடைபெற்றன குழுப்பாடல் பயிற்சியின் பின்பு சகோ. யூட் சுதர்சன் வேதப்பாடம் வாசிக்க, அருட்திரு. ஏ. எஸ். ரி ஆனந்தன் அவர்கள் ஜெபம் செய்தபின்பு போட்டிகள் ஆரம்பமாகின.

வேதப்புதிர்ப் போட்டிக்காக 13 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிரிவில் அளவெட்டி, உடுவில் ஆகியனவும்; 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிரிவில் வட்டுக்கோட்டை, உடுவில் ஆகியனவும்; 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிரிவில் அளவெட்டி. அராலி ஆகியனவும் இறுதிப்போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டன. தனிப் பாடல் போட்டிகளுக்கு ஒவ்வொரு பிரிவிலும் ஆறுபேர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் 12-7-97இல் இறுதிப்போட்டியில் பங்கு கொள்வர்.

### வாசகர்களுக்கு!

வாசகர்களின் எண்ணக்குவியல்களை வெளிப்படுத்துவதற்காக, புதிய பகுதி ஒன்றைத் தொடங்க எண்ணியுள்ளோம். அப்பகுதிக்கு உங்களிடமிருந்து 'உதயதாரகை' பத்திரிகை பற்றியும், அதன் ஆக்கங்கள் பற்றியும் விமர்சனக் கடிதங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. தரமானவை பிரசுரிக்கப்படும்.

ஆ-ர்

## திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997

# சிறார் சோலை

**இவ்வாரச் சிந்தனைக்கு:**

"கொடுமையைக் கண்டவர்கள் தான் உலகிற்கு நன்மை செய்ய முடியும்"

— பி. எஸ். ஆர். ராவ்.

அன்பான தம்பி தங்கைகளே!

ஒரு தகப்பன் இறக்கும்போது தன் இரு பிள்ளைகளுக்கும் ஒரு போர்வை, ஒரு பசுமாடு, ஒரு மாமரம் என்பனவற்றை விட்டுப்போயிருந்தார். அம் மூன்றையும் பங்கிடும் பொறுப்பு அண்ணனுக்குக் கொடுக்கப்பட்டது. மாமரத்தின் அடிப்பகுதியையும், பசுமாட்டின் பின் பகுதியையும், போர்வையைப் பகலிலும் தம்பிக்குக் கொடுத்தான்.

பசுமாட்டுக்கு தம்பி ஆகாரம் கொடுக்க, அண்ணன் பால் கறந்தான். மாமரத்துக்கு தம்பி தண்ணீர் ஊற்ற அண்ணன் பழம்பிடுங்கினான். போர்வையின்றி இரவில் தம்பி வேதனைப்பட்டான்.

தம்பிக்கு ஒருநாள் மூளைவந்தது. தன் பகுதிகளான மரத்தின் அடிப்பகுதியையும், மாட்டின் தலைப்பகுதியையும் வெட்டப்போனான். மாலை நேரத்தில் போர்வையை நீரில் நனைத்தான். அண்ணனுக்கு அறிவு தெளிந்தது. தம்பியிடம் மன்னிப்புக்கேட்டான். நாமும் எமது அயலாரை ஏமாற்றாமல் வாழ்வோமா?

## சிறார் சிரிப்பு

ராமு:- உனக்கு வீட்டிலும்; பள்ளியிலும் பிடித்தது என்ன?

சோமு:- "காப்பி......"

## புதிர் நேரம்

சென்றவாரப் புதிரின் விடை: இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினது ஆகும்.

இவ்வாரப் புதிர்: "உண்மை உங்களை விடுதலையாக்கும்" என்பது எதன் மகுட வாக்கியம்?

தெரிந்தவர்கள் விடையை எழுதி அனுப்புங்கள்
தெரியாதவர்கள் அடுத்த இதழைப் புரட்டுங்கள்.

சரி தம்பி தங்கைகளே!! விடைபெறும் நேரம் வந்து விட்டது. மறு இதழில் சுல்க்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

## 'உங்களவன்' எழுதும் தொடர் கதை

# நிம்மதி எங்கே?

ஓமடா ராஜா ...... உன்ர அப்பா ..... முகம் கழுவேக்கை தவறுதலாகக் கிணத்துக்குள்ளே "கிணத்துக்குள்ளை...?" செத்துப்போய் கிடக்கிறார் ...... அவரைத் தூக்கிகறத்துக்கு கூட ஒருத்தருமில்லை அதுதான் ... உன்னட்டை ......" ஐயோ ...... அப்பா ... காலைலை உங்களோடை கதைக்காமக் கூட வந்துட்டேன் ...... அப்பா நீங்கள் நீங்கள் ... நீங்கள் இனி எப்ப என்னோட கதைக்கப் போறியள் ஐயோ ..." அவனது வாய் ஒலம் பாட அவனது கால்கள் ரியூசனை விட்டு வெளியேறி தனது வீட்டை நோக்கி முன்னேறுகின்றன.

வீட்டை நெருங்கினவுடனே தனது தாயின் ஒலத்தைத் தான் அவன் காதுகள் கேட்க முடிந்தது. அவன் கேற்றடிக்கு வரும் போதே தாய் ஒடிவர, அவனது தங்கை ராதா பின்னே ஒடி வர, அவர்களுக்குக்குப் பின் சிறுமனிதவினங்கள் ஒடிவர தாய் வந்து ராஜாவைக் கட்டியணைத்து தனது மனதில் இருந்தவற்றை திறந்து விடுகிறாள் " ஐயோ ... ராஜா ...... எங்களைத் தவிக்க வைச்சுட்டுப் போயிட்டாரடா .. இனி ...... நாங்கள் என்ன செய்யுறது ...... ஐயோ ராஜா ..." "ஓமணை அம்மா ... நான் ...... நான் தான் இனிக் குடும்பத்தைக் காப்பாத்த வேணும் ... ... ... என்ற அந்தப் பொறுப்பை எனக்கு உணர்த்த...... என்னை உங்களைத் தவிக்க வச்சுட்டு .. இப்படி ஐயோ ...... அம்மா " தனது நெஞ்சில் இருந்தவற்றை அவ் விடத்திலேயே கொட்டித் தீர்த்து விடுகிறான் ராஜா.

(4ம் பக்கம் பார்க்க)

# ஆதியாகமம் பேசுகிறது

இறை சாயலில் மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்பதே ஆதியாகம நூல் தரும் கருத்துச் செல்வம் ஆகும். இது புரியமுடியாத ஒன்று; ஆனால் புரியும்படியான அறிவு அவனுக்குள் உண்டு. உயிரினங்களின் படைப்பில் சகல சிருஷ்டிப்புகளுக்கும் அவனே மணிமகுடம். அவற்றை ஆளும் வல்லமையும் இறைவனால் அவனுக்கே அளிக்கப் பட்டுள்ளது. அவனுக்குப் பிரபஞ்சத்தில் தனியிடம் உண்டு. தேவன் சகல ஜீவராசிகளையும் தன் வார்த்தையினால் "ஆகும்" என்று சொல்லியே படைத்தார். ஆனால் வசனம் 1: 26ன் படி மனிதனை தம்முடைய சாயலாகப் படைப்போம் என்று எண்ணி, சற்று நேரம் சிந்தித்ததாக கூறப்படுகின்றது. ஆகையால் படைப்பின் ஒழுங்கில் மனிதனுக்கு சிறப்பான ஒரிடம் கொடுக்கப்பட்டிருககிறது.

ஆதியாகமம் 1ம், 2ம் அதிகாரங்கள் படைப்பின் ஒழுங்கு முறைகளையே கொண்டிருப்பினும், வெவ்வேறு கருவூலங்களையே கொண்டுள்ளன, அதாவது 1ம் அதிகாரம் இறைசாயல் பற்றிக் கூறும் போது, 2ம் அதிகாரம் மனிதன் களி மண்ணால் உருப் பெற்றான் எனக் குறிப்பிடுகிறது. இவ்விரு அதிகாரங்களும் 6 நாட்களில் படைப்பும் 7ம் நாளில் ஓய்வும் என்ற உண்மைத்துவத்தில் மட்டும் ஒத்திசைகின்றன மேலும் 1ம் அதிகாரம் தரும் 3 கருவூல உண்மைகளாவன; அதி 1: 27 படி,

(1) கடவுளே மனிதனைப் படைத்தார்.

(2) இறைசாயலில் அவனைப் படைத்தார்.

(3) மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்.

உயிரினங்களிலே உன்னத இடத்தை அளிக்கவே மனிதனுக்கு இறைசாயல் கொடுக்கப்பட்டது.

ஆதியாகமம் நாடோடிகளின் இலக்கியம். இவ் இலக்கியத்தில் காணப்படும் சிறந்த கருவூலம் இறைசாயலில் மனிதன் உருப்பெற்றான் என்பதே. பலவீனமான மனிதர் யூதர் என்ற காரணத்தினால் இவ்விலக்கியத்தை விஞ்ஞான உலகம் ஏற்க மறுக்கிறதா? அப்படியானால் விஞ்ஞானத்திற்கும் வேதாகமத்திற்கும் ஒத்திசைவு காணப்படுகிறதா? இரண்டுமேயில்லை. காரணம் விஞ்ஞான, பரிணாம கோட்பாடுகள் ஏற்கனவே தம் எடுகோல்களை நிரூபிக்க வழியின்றித் தவிக்கின்றன, இந்நிலையில் இக்கோட்பாடுகளுடன் இறைசாயல் கோட்பாடு ஒப்பிடப்படுவது கலாச்சார பகைமையையே குறிக்கிறது. விஞ்ஞான, பரிணாமக் கோட்பாடுகள் செயலிழந்த நிலையில் மனித மீட்பிற்கு வழி; மனிதன் இறைசாயலில் உருப்பெற்றான் என்ற அறிவே. இன்று அவசியமாகிறது.

மனிதனும் மிருகங்களும் இறைவனாலேயே படைக்கப்பட்டன. ஆனால் இவற்றிற்குள்ள இயல்புகள், உணர்வுகள் ஒப்பிட முடியாதன. மனிதன் சிந்திக்கிறான்; பேசுகிறான்; செயலாற்றுகிறான்; அத்துடன் சிருஷ்டி கர்த்தாவுடன் தொடர்பு கொள்கிறான். ஆனால் மிருகங்களுக்கோ அத்தகைய ஆற்றல் இல்லை மனிதன் கற்கிறான்; ஆய்வு செய்கிறான்; நாகரீகம் அடைகிறான். ஆனால் மிருகங்களோ அன்றும் இன்றும் ஒரே நிலையில் இருக்கின்றன. மனிதன் ஆறறிவு பெற்றான்; இறை சாயலின் முக்கிய அம்சம் அதுவே. அவன் இறைவனுடனும் குடும்ப, சமூகங்களுடனும் நல்லுறவு கொண்டு வாழ வேண்டும். அதுவே இறைவனின் அரிய சித்தமாகும்.

வீழ்ச்சியின் பின்பு பாவ இயல்பு பெற்ற மனிதரிடம் இந்த இறை சாயல் முற்று முழுதாக அழிந்து போகவில்லை; சிறிதாயினும் இறை சாயல் அவனிடம் உண்டு என்றார் எமில் புருணர் (Emil Burunar). மனிதன் இன்னமும் தீமையைவிட்டு நன்மை செய்வதற்கு காரணம் அவனில் உள்ள இறைசாயலே. இவ் வகையான சாயல் பெற்ற மனிதனை மீட்பதற்கும் எஞ்சியிருக்கும் சாயலே காரணமாகும். இவ்விறை சாயல் தேவன் நம்மேல் அன்பு செலுத்தவும் அதிகாரம் வைக்கவும் இடமளிக்கிறது, ஆகவே தேவன் மனிதனுக்கு அளித்த இறை சாயல் என்பது நன்மை செய்யவும் தான் செய்த தீமைகளை யுணர்ந்து மனந்திரும்பி கிருபையைப் பெறவும் வழி செய்கின்றது.

(தொடரும்)

வண-J. T

## மட்டக்களப்பு தேவகிராமத்தில் புதிய ஆலயம்

மட்டக்களப்பு தேவகிராமத்தில் 15 - 06 - 97 அன்று ஒரு புதிய சிற்றாலயமும் பகற் பராமரிப்பு நிலையமும் நமது பேராயரினால் திறந்து வைக்கப்பட்டது மாலை 4.00 மணிக்கு மொறக்கட்டாஞ்சேனையைச் சென்றடைந்த பேராயரை கிராமத்து மக்களும் பாடசாலை அதிபரும் மாலை சூடிவரவேற்றனர் வண S. ஜெயநேசன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

திட்டமிடல் அதிகாரி C. அருமைநாயகம் உட்படப் பலர் பேசினார்கள்.

## வரணி ப. ப. நிலைய விளையாட்டுப்போட்டி

வரணி தென்னிந்தியத் திருச்சபையினது பகல் பராமரிப்பு நிலைய விளையாட்டுப்போட்டி 21 - 06 - 97 அன்று குருமனை வளாகத்தில் சபைக்குரு அருள்திரு எஸ். ஐ. ஆனந்தராஜன் தலைமையில் நடந்தது. சிறப்பு விருந்தினராக வரணி மகாவித்தியாலய அதிபரும்; பிரதம விருந்தினராக உடுப்பிட்டி சபைக்குரு அருள்திரு. ரி. எச். வசந்தகுமாரும், அவர் தம் பாரியாரும் பங்குபற்றி பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கினர். அதிபருடன் ஆசிரியர்களும், கிராமமக்களும் இச்சமயம் வருகை தந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

ஆரம்ப செபத்தினை குடத்தனை ஊழியன் சகோ. எஸ். குகனேஸ்வரனும், ஆசீர்வாதத்தினை உசன் சபைக்குரு அருள்திரு. பென்ஜமீன் ஜெயராஜாவும் வழங்கினர். விளையாட்டுக்களில் 40 பகல்பராமரிப்பு நிலையப் பிள்ளைகளும் பங்கு கொண்டது இவண் சுட்டிக்காட்டத்தக்கது

## உதயதாரகை

### தாரகை ஒளி

"கஷ்டப்பட்ட ஆத்மா தான் வளரமுடியும். சுகப்பட்ட ஆத்மா அனுபவம் கிடைக்காத ஓர் ஏழை"
—அலெக்ஸாண்டர்
ஸோல்ஜினிட்ஸின்

## நம்பிக்கையிற் களிகூருங்கள்!

இவ்வாண்டின் பிள்ளைகள் விழாவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள மகுட வாக்கியம் 'நம்பிக்கையிற் களிகூருங்கள்' என்பதேயாகும். இது இக்காலத்துக்கேற்ற ஒரு மகுடவாக்கியமாகும்.

போர்க்காலக் கெடுபிடிகள், பல மக்களை உடல், உளரீதியாகப் பாதித்துள்ளன. நம்பிக்கை இழந்து, 'கடவுள் எங்கே?' எனும் கேள்விகேட்டு, மிகவும் குழம்பிய நிலையில் மக்கள் தவித்துக் கொண்டுள்ளனர். களிகூருதலுக்கே இடமில்லாத நிலையில், துன்பத்துள் உழலும் மக்களுக்கு இவ் வாக்கியம் மிகவும் பொருத்தமுடையதாகும்.

எமது நம்பிக்கை உலகத்தில் இராமல் இறைவனில் இருக்குமானால் நாம் எதற்குமே அஞ்சத்தேவையில்லை.

வெறுமையிலிருந்து உருவாக்கவும், இறந்த தன்மையிலிருந்து உயிர்ப்படையச் செய்யவும் வல்லவரான இறைவனிடம் நம்பிக்கை உடையவர்களாக நாம் வாழ்வோமானால், இந்த உலகத்தின் பாடுகள், வேதனைகள் எவையும் எமது நம்பிக்கையை மேற்கொள்ள முடியாது.

இன்றைய சூழலில், துன்பங்களைக் கண்டு துவண்டு, இறைவன் எம்மைக் கைவிட்டு விட்டார் என்னும் அவ நம்பிக்கையில் வாழ்வோரும் உள்ளனர்.

ஆனால் இவ்வகையான துன்பங்கள் மத்தியிலும் இறை ஆழ் பற்றுறுதியில் ஊன்றக்கட்டப்பட்டு, இறைவன் ஒருவரே எமக்கு உண்மையான விடுதலையைத் தர முடியும் என்னும் நம்பிக்கையில் வாழ்பவர்களும் உள்ளனர்.

நாமும் இவ்வாறான சூழலில் இறைவனை விட்டுப் பின்வாங்காமல், உண்மையான விடுதலைதர வல்லவர் இறைவனே எனும் நம்பிக்கையிற் களிகூருவோமாக!

---

## நல்லாசிரியன் அமரர் சி. வல்லிபுரம் அவர்கள் பற்றிய கண்ணோட்டம்

நுணாவில் திருச்சபையின் நீண்ட கால உறுப்பினரும், அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளில் பலவருடங்கள் தலைமையாசிரியருமாகப் பணியாற்றிய திரு சி. வல்லிபுரம் சென்ற 13- 6- 97 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார்.

திரு. வல்லிபுரம் இந்துக்குடும்பத்திற் பிறந்தவர். கிறிஸ்துவைத் தமது இரட்சகராக ஏற்று இறுதிவரை விசுவாசத்திற் தளம்பாத அன்பராக வாழ்ந்து வந்தார். இவரை யான் எனது குழந்தைப் பிராயத்திலிருந்தே அறிவேன். பேசும்பொழுது நகைச்சுவையோடியிருக்கும். இதனாலே சிறுபிள்ளைகளாகிய நாம் இவர் எமது வீட்டிற்கு வந்தால் இவரைச் சூழ்ந்து நிற்போம். எப்பொழுதும் ஒரு தலைமையாசிரியருக்குரிய மிடுக்குடன் பேசுவார். உரத்த சத்தமாகப் பேசுவார். நாலு வீடுகளுக்குக் கேட்கத்தக்கதாகப் பேசுவார்.

திரு வல்லிபுரம் அவர்களிடம் நான் கண்ட சிறந்த பண்பு அவரிடத்திலிருந்த முகமலர்ச்சி. "எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்" என்று பிலிப்பியருக்கு எழுதினார் பவுல். ஆவியின் கனிகளில் அன்புக்கு அடுத்ததாகச் சந்தோஷத்தை வைத்தார். திரு வல்லிபுரம் அவர்களிடத்தில் எப்போதும் குதூகல உணர்ச்சியைக்காணலாம். கடந்த இரு வருடங்களாக அவர் பலவிதமான நோய்களுக்கு உட்பட்டிருந்த பொழுதும் அவர் சோர்ந்து போகவில்லை. அப்பொழுதும் விகடமாகப் பேசி தம்மைப் பார்க்க வந்தவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டேயிருந்தார்.

திரு. வல்லிபுரம் அவர்களுக்கு வாழ்வில் பல துன்பங்கள் வந்தனவென்பதை மறுக்க முடியாது. இளவயதிலேயே அவருடைய அருமை மனைவி பாக்கியக்கா மறுமைக்குள் பிரவேசித்து விட்டார். டிறிபேர்க் கல்லூரியிலே பிள்ளைகள் முதலிற் சேருவது பாக்கியக்காவின் அரிவரி வகுப்பிலேதான். இவ்வம்மையார் இளவயதில் மரித்த பின்பும், வல்லிபுரம் எந்த விதமானதளர்வுமின்றித் தமது கடமைகளைச் செவ்வனே செய்து வந்தார். கல்வீடுகள் கட்டப்பட்டன. கலியாணங்கள் நடாத்தப்பட்டன. சமூகசேவைகளில் ஊக்கமாக உழைத்தார். திருச்சபைத் கருமங்களில ஆர்வத்தோடு ஈடுபட்டார். "பின்னானவைகளைமறந்து முன்னானவைகளையே நாடி" என்ற வாசகத்திற்கு இலக்கணமாக இவர் வாழ்வு அமைந்திருந்தது.

திரு. வல்லிபுரம் நுணாவிற் திருச்சபையின் நம்பிக்கைக் குரிய சிரேஷ்ட உறுப்பினன். திருச்சபை வளர்ச்சியில் வாலிபப்பிராயத்திலிருந்தே கரிசனை கொண்டு விளங்கினார். கறோல் கோஷ்டியோடு வீடுகளைச் சந்தித்தல் அவருக்கு உவப்பான வேலையாக இருந்தது. கறோல் பாடல்களை இயற்றுதல், பயிற்றுவித்தல் வீடுகளைச் சந்தித்தல் என்பன அவருக்குப் பெருமகிழ்வு அளித்தன. அத்தியட்சாதீன சங்கத்திலே நுணாவிற் திருச்சபையின் பிரதிநிதியாக வந்து கலந்து கொள்வார். கூட்டங்கள் சுவாரஸ்யமற்ற நிலையில் இருக்கும் பொழுது, எழுந்து ஏதாவது விகடமாகச் சொல்லி விடுவார். அங்கத்தவர்கள் உற்சாகமடைந்து விடுவார்.

1993ம் ஆண்டு யான் பேராயராகப் பதவியேற்றபின் நுணாவிற் திருச்சபையார் வரவேற்பளித்தனர். திரு. வல்லிபுரம் அந்த நிகழ்ச்சியில் உரையாற்றினார். அவர் உரை என் உள்ளத்தைத் தொட்டது. திரு வல்லிபுரம் எனது பெற்றோரின் நீண்ட நாளைய நண்பர். எனது தாயாரைப் பற்றி அவர் கூறிய பொழுது என் கண்கள் பனித்து விட்டன. நுணாவிற் திருச்சபையின் வரவேற்பை நினைத்து இன்றும் கடவுளைத் துதிக்கின்றேன்.

திரு வல்லிபுரம் அவர்களுக்குக் கடவுள் நீண்ட ஆயுளைக் கொடுத்தார். இப்பொழுது அவரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டு விட்டார். அவருடைய நகைச்சுவை நிரம்பிய பேச்சுக்களையும் சிரிப்பொலிகளையும் இனி நாம் கேட்கப் போவதில்லை. "நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்திற்குள் பிரவேசித்துத் தமது படுக்கையில் இளைப்பாறுகின்றனர்" என்கின்றது திருமறை.

நமது ஆதீனத்தின் மூத்த தலைவர்கள் ஒவ்வொருவராகப் போய்க்கொண்டிருப்பது எமக்கு வேதனையளிக்கின்றது. ஆனால் திரு வல்லிபுரம் அவர்களின் மரணம் கனி போன்றது. வண. EKY மூன்று விஷயங்களிற்காக ஒருவன் மாணத்தை ஆசிக்கலாம் என்று எழுதியுள்ளார்:-

(அ) தனது வாழ்வைத் திரும்பிப்பார்த்து அதில் திருப்தியடைந்து வாழ்வை வீணாக்கவில்லையே என்ற உணர்வு

(ஆ) தனது இலக்குகளையும் கொள்கையையும் தொடர்ந்து நடாத்தப் பிள்ளைகள் இருக்கின்றனர் என்ற உணர்வு.

(இ) தான் போகின்ற இடம் எது என்பதனைப் பற்றிய உறுதிப்பாடு

இம் மூன்றும் இருந்தால் மனிதனுக்கு ஆதாயம் என்று கூறியுள்ளார். திரு வல்லிபுரம் மனநிறைவோடு சென்று விட்டார். அவருடைய முன்மாதிரியை நாம் பின்பற்றுவோமாக.

பேராயர் S. ஜெபநேசன்

---

நுணாவில் திருச்சபை மூத்த அங்கத்தவர் சாமுவேல் செல்லையா வல்லிபுரம் தனது 79 ஆம் வயதில் அமரரானார். 35 வருடங்கள் ஆசிரியப் பணியை முடித்து இளைப்பாறினார். ஆசிரியப் பணியோடு, சமூக சேவைகளிலும், திருச்சபைப் பணிகளிலும் அயராது உழைத்த ஒரு நற்பண்பாளன். நுணாவில் திருச்சபையின் செயலாளராகவும், ஆதீனப் பிரதிநிதியாகவும் பல காலம் பணியாற்றியவர்.

வாழ்க்கை எப்படி வாழ்ந்தாலும் சரி என்ற அடிப்படையில் அல்ல, வாழ்க்கை இப்படித்தான் வாழவேண்டும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்த அடியான். அஞ்சாமல் தன் சிந்தனையை எடுத்துரைக்கும் குணம், இளகிய மனம், உதவி புரியும் உள்ளம் கொண்டவர், சிறுபிள்ளைகள் யாவரும் கல்வி பெறவேண்டும், ஒழுக்கம் பேணவேண்டும், தெய்வபக்தியுள்ளவர்களாய் வளர்க்கப்படவேண்டும். சமூகத்தில் நல் மக்களாய் வாழவேண்டும் என்ற தன் சிந்தனையை செயல் முறைப்படுத்த பாடுபட்டவர். பழமைக் காரியங்களில் வைராக்கியம் உடையவராய் இருந்தாலும் புதுமைக் காரியங்களை வெறுத்தவர் அல்ல.

சொல்ல 'வல்லன் சோர்வு இலன் அஞ்சான் – அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது'

சொல்லில் வல்லவன், சோர்வு இல்லாதவன், அஞ்சாதவன்- இப்பண்புகளைக் கொண்டவனைவெல்வது அரிது. வள்ளுவன் குறள் இவருக்குப் பொருந்தும். கடமை கண்ணியம் கட்டுப்பாடு இவைகளோடு கிறிஸ்துவின் சிந்தையையும் உள்ளடக்கிய ஓர் அழகான வாழ்வை நுணாவிலில் வாழ்ந்தார். எளிமையான, தெய்வபயம் உள்ள முயற்சியுடைய வாழ்வு அவர் பதிய வைத்த அடிச்சுவடுகள். அவர் விட்டுச் சென்ற அழியாத சுவடுகள் மேல் எங்கள் கால்களைப் பதிய வைப்பதே நாம் அவர்க்குச் செய்யும் அஞ்சலி

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள். அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்."

வண T. ஜெயச்சந்திரன்

---

## அபிடேக ஆராதனையில்.....

புதிய உதவி ஊழியர்களான டி. போல் சுரேஷ், வி. பத்மதயாளன், ஆர். ஜோன் செல்வம், ஜி. ஜோய்ஸ் குணதேவி ஆகியோரின் அபிடேக ஆராதனை கொழும்பு தென்னிந்தியத்திருச்சபையில் நடைபெற்றது நாம் அறிந்ததே. இவ்வாராதனையை நடத்தியவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகும்.

பிலிமத்தலாவா இறையியல் கல்லூரி முதல்வர் அருட் கலாநிதி. குமரா இலங்காசிங்க அருளுரை ஆற்றினார். வண எஸ். ஜெயநேசன், வண. அன்ரனி சவரிமுத்து, வண. ஏ. ஜெயக்குமாரன், வண. வி. என். தர்மகுலசிங்கம் ஊழியர்களை முன்நிறுத்தி, திருவிருந்தில் உதவினர்.

செல்லன் கென்றி, வி. பத்மநாதன், அருள்திரு ஏழ் P. சொலமன்ஸ் வேதப்பாடங்களை வாசித்தனர். திருமதி ஈ. எஸ். குணரட்ணம், திருமதி சிறிபத்மநாதன், திரு. G. D. நியூட்டன், திரு. றெக்ஸ் அருள் அருண் குமார் திருவிருந்து. காணிக்கை கொண்டு வருவதில் உதவினர். வித்தானியா செபத்தினை அருள்திரு ரி. ஜெயச்சந்திரன் நடாத்தினார்.

## வாழ்க்கைக்கு சில

- ''நான்'' ''எனக்காக'' என்றால் எல்லாம் நாசம். 'நான்' 'உனக்காக' என்றால் எல்லாவற்றிலும் விசும் சுக வாசம்
- ''அன்பு'' இதனை பிரயோகித்துப் பாருங்களேன். எல்லாம் நல்ல படியாக நடக்கும்.
- சின்னவனோ, பெரியவனோ பாராட்டுகின்ற சந்தர்ப்பம் அதுவென்றால் பாராட்டத்தயக்கம் காட்டாதீர்கள். அதுக்காக போலியை வரவழைத்துக்கொள்ளாதீர்கள்.
- தவறுகளை நியாயப்படுத்தாதீர்கள். அது மேலும் மேலும் தவறான வழிக்கே இட்டுச்செல்லும். எனவே தவறுகளை ஒப்புக்கொள்ளுங்கள், தவறுக்காய் மனம் வருந்துங்கள். இது பிறருக்கு உங்கள் மீது ஒரு பிடிப்பை ஏற்படுத்தும்.
- கூடியளவுமட்டும் எந்நிலையிலும் ஒன்றாகக் கூடி வாழ முயற்சி செய்யுங்கள்.
- யாவரையும் மதித்து நடவுங்கள். பேச்சில் கனிவோடும், சிந்தையில் தெளிவோடும், மனதில் நன்றியோடும் வாழுங்கள்.
- மிக முக்கியமாக எம்மை படைத்து வழிநடத்தும் நல்லதேவனை சிந்தையில் இருத்துங்கள்.

தொகுப்பு:- J. M. T. றொட்றிக்கோ
('நம்பிக்கை இல்லம்')

## இலங்கை கிறிஸ்தவ...

மீகத்தேடல் உண்டென்பதைக் காட்டினான். இன்று போரினால் ஏற்படும் இரத்தக்களறிகள், இழப்புக்கள் மத்தியில் மக்களுக்கு ஆன்மீக தாகம் மேலோங்கி உள்ளது. இது யேசுவில் வளர்க்கப்படவேண்டும். ஒளியை நோக்கிய தாகமாக இது உருப்பெறவேண்டும். 'அழைத்தல்' என்பது மானிடராகுதலுக்கு என்பதைவிட ஆவியின் போர்வீரனாகுவதற்கே'' என்றார்.

தொடர்ந்து வேதப்படிப்பினை யோவான்; 2இல் உள்ள கானாவூர் திருமண சம்பவத்தினை மையமாகக் கொண்டு நடாத்தினார். ''மூன்றாம் நாள் மனிதனின் மாயத்திரை அகலும்நாள். யோனா 3 நாட்கள் மீனின் வயிற்றில் இருந்தான். இயேசு 3ஆம் நாள் உயிர்த்தார். இப்பகுதியில் வரும் திராட்சைரசம் மனித சந்தோஷங்களின் குறியீடு. இயேசு மனிதனின் ஆன்மாவை இறைவனது தெய்வீகத் திருமணத்துக்கு அழைக்க வந்தவராகும். உள்ளம் வெறிச்சோடி பள்ளத்தாக்காகி, நிறைக்க முடியாத தவிப்பு ஆன்மாவில் உண்டு. ரசம் தீர்ந்து விட்டது எனும் ஏக்கம் இன்னும் உண்டு. எல்லாமனிதருக்கும் இன்று குறைகள் உண்டு. முதல் ரசம் - உலகச்சுவைகள் ஆகும் அது தீர்ந்துபோக புதிய ரசம் ஒன்று வருகிறது.

சாடிகள் நிறைய புதிய ரசம் கிடைக்கிறது இறைவன் கொடுக்கும் ஆசீர்வாதம் கணக்கிட முடியாது. 7 கூடைகள் நிறையவும், 12 கூடைகள் நிறையவும், மிகுதியாக எடுத்த சீடர்கள் ஒரு முறை அப்பத்துக்காகக் கவலைப்பட்டனர் இப்படிப்பட்ட கவலைகள் எமக்கு இருக்கக்கூடாது. ஆண்டவர் குறைவிடுபவரல்ல. அவர் எம்மைக் கைவிடாமல் பார்த்துக் கொள்வார். பரிசுத்த ஆவியானவர்தான் எமக்குள் ஆன்மீக வளத்தைத் தர முடியும். அவ்வாறு தருகையில் எல்லாக் குறைகளும் நீங்கி ஒரு நிறைவு ஏற்படும். இதுவே உள்ளான, ஆழமான ஆன்மீகம்'' என்று இவ்வேதப்படிப்பில் கூறினார்.

இவ்வாறான கருத்தரங்குகள் மிகுந்த பிரயோசனமுள்ளவை எனவும், இவ்வாறு இன்னமும் நடாத்தப்படவேண்டும் எனவும் இக்கருத்தரங்கில் பங்குகொண்ட இறை. கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்கள், யாழ். கல்லூரி மாணவர்கள், இறை. ஊழியர்கள் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

### வாசகர்களுக்கு!

நீங்கள் வருடாந்த சந்தா செலுத்துபவர்களா இருந்தால் உங்கள் சந்தா பணத்தைத் தயவு செய்து புதுப்பித்துக் கொள்ளுங்கள். மணி ஓடராகவே, போஸ்ரல் ஓடராகவோ பணம் அனுப்பலாம். புதிய சந்தாதாரரும் இணைந்து கொள்ளலாம்-

வருடசந்தா ரூபா 250/-

ஆயுள் சந்தா ரூபா 1000/-

உங்க ஒத்துழைப்பிற்கு நன்றி.

ஆசிரியர்

## நிம்மதி எங்..

ஊரார் அழ, உறவினர் அழ, நண்பர் அழ, சகலரும் அழ அவரின் பூதவுடல் அடக்கம் செய்யப்படுகிறது ... அவரின் வாழ்வு ஓய்வடைந்து விட்டது.

தகப்பன் இறந்து போனதும் தனது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு ராஜாவை வந்தடைந்தது. அதே ஊரில் ஒரு பெரும் புள்ளி விஸ்வநாதி. அவரிடம் வேலைக்கு சேருவதற்கு படாதபாடு படுகிறான் ராஜா. ஒருநாள் அவரிடம் வேலை கேட்பதற்காக தனது பயணத்தை ஆரம்பிக்கிறான். ஒருநாள் இப்படித்தான் வேலைக்குச் சேர வந்து திரும்பிப் போன போதுதான் மிகுதி. ஆனாலும் அவனுக்கு விட்டுக் கொடுக்கும் தன்மை இல்லை. இன்றும் அப்படித்தான் ...'சேர் ... எனக்கு உங்கடை கடையில ஒரு சின்ன வேலையாவது போட்டுத் தந்தீங்கள் என்றால் ... '' விஸ்வநாதியாரின் பதிலை எதிர்பார்க்கிறான் ராஜா.

(தொடரும்)

## பொறியியலாளர் இரட்ணராஜா படுகாயம்

நுணாவில் தென்னிந்தியத் திருச்சபையின் அங்கத்தவரான திரு. வெற்றிவேல் இரட்ணராஜா அவர்கள் திருகோணமலையில் நடந்த குண்டு வெடிப்பில் படுகாயமடைந்தார்.

திருகோணமலைக் கல்வித் திணைக்களப் பொறியியலாளராகக் கடமை புரியும் இவர், கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் அவரை அவசரமாக மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு அனுப்பும் முயற்சியில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா ஈடுபட்டிருப்பதாகவும் ஒரு தகவல் தெரிவித்ததாக 6/7/97 'உதயன்' பத்திரிகை தெரிவித்தது. இவருக்காக இணைந்து இறைவனைப் பிரார்த்திபோமாக!

## மாலுமிகளின் சுவையான அனுபவம்

கடந்த வாரம் விடுதலையான இரு இந்தோனேசிய மாலுமிகள் பத்திரிகையாளர்களுக்குத் தமது அனுபவத்தினைத் தெரிவித்துள்ளனர்.

''எம்மைக் கடத்தியோர் யாரென எமக்குத் தெரியாது. ஆனால் தாம் விடுதலைப் புலிகள் என்று எமக்கு அவர்கள் தெரிவித்தனர். சிலமீன்பிடிப் படகுகள் எம்மை நோக்கி வந்தன. எமது கப்பலுள் 20 ஆயுதபாணிகள் ஏறினர். எம்மைத் தமது படகுள் ஏறுமாறு பணித்தனர். படகின் அதிவேகம் காரணமாக நான் கீழே விழுந்து விட்டேன். எனது தலையிலும் சிறிது காயம் ஏற்பட்டது.

பின்பு நாம் நடுக்காட்டு முகாம் ஒன்றுள் அழைத்துச் செல்லப்பட்டோம். எமக்கு உணவு வழங்கி, எமது காயத்துக்கு மருந்து கட்டி, 2 பனடோல்களும் தந்தனர். எம்மை நன்கு உபசரித்துடன் எம்முடன் இங்கிதமாகவும் நடந்துகொண்டனர். தினமும் எமது தங்குமிடம் மாற்றப்பட்டது 'ஏன் எம்மைக் கடத்தினீர்கள்?'' எனக் கேட்டதற்கு ''இலங்கை இராணுவத்தினரையும் அரசகரப்பினரையும் ஏற்றிய தாலேயே'' என்றனர். நாம் அதை மறுத்து ''எமது கப்பல் அ இச் சேவைக்கப்படலே'' என்றோம்.


தங்க வைக்கப்பட்ட இடங்களில் அவர்களது அதியுயர் தலைவரின் படமும், வேறு படங்களும் காணப்பட்டது.

யூலை 3ம் திகதி ''கூட்டா'' என்ற ஒருவர் மறுதினம் நாம் இருவர் மாத்திரம் நாளை விடுவிக்கப்பட போவதாகவும் ஏனைய 7 பேரையும் விசாரணையின் பின் விடுதலை செய்வதாகவும் தெரிவித்தார்.

ICRC இடம் கையளிப்பதற்கு முன்னதாக ஒரு கடைத்தெருவுக்கு அழைத்துச் சென்ற அவர்கள் எமக்குப் புதிய உடைகள், பெல்ட் மற்றும் சில அன்பளிப்புப் பொருட்களை வாங்கித்தந்தனர். நாம் இருவரும் திருமணமானவர்கள். எமக்குத் தலா ஒரு குழந்தை உண்டு'' என்றும், ''ஒருவரின் மனைவி தற்போது கர்ப்பிணி'' என்றும் கூறினார்கள்.

## நெடுந்தீவில்...

னால் பேராயரது சேவையைப் பாராட்டி ஒரு விழா எடுத்தனர். இதில் கத்தோலிக்க சபைக் குருமார், அருட்சகோதரிகள், பாடசாலை அதிபர்கள், கிராமசேவையாளர், வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் பின் ஐக்கியமதிய போசனம் பரிமாறப்பட்டது.



23 - 6 – 97 இல் பகல் பராமரிப்பு நிலையங்களைப் பார்வையிட்ட முன்னாள் பேராயருக்கு காலை 10-30 மணிக்கு நெடுந்தீவு மத்தி பகல் பராமரிப்பு நிலையத்தவரும், மாலை 3-30 மணிக்கு நெடுந்தீவு மேற்கு பகல் பராமரிப்பு நிலையத்தினரும் பேராயரது சேவையைப் பாராட்டி தேநீர் விருந்தளித்து, விழா எடுத்து மகிழ்ந்தனர்.

## நாம் எந்த ரகம்?

ஒரு ரோஜச் செடியில் அழகான ரோஜாப் பூ ஒன்று மலர்ந்துள்ளது இருவர் அடுத்தடுத்து அவ்வழியே வருகின்றனர் முதலாமவர் அச்



செடியை பார்த்து ''இந்த அழகான பூவுக்குள் ஏன் தான் இந்த அசிங்கமான முள்ளைக் கடவுள் படைத்தாரோ'' என கடவுளின் படைப்பினை இகழ்ந்து கொண்டு செல்கிறார். இரண்டாமவர் — ''இந்த அசிங்கமான முட்களுக்குள்ளும் இந்த அழகான பூவைப் படைத்த ஆண்டவரது படைப்பு எவ்வளவு மகத்துவமானது?'' என கடவுளின் படைப்பினைப் புகழ்ந்து கொண்டு செல்கிறார். இவர்களுள் நாம எந்த ரகம்?

## ஞாபகார்த்த செபக்கூட்டம்

கடந்த 29 - 05 – 97 இல் நடந்த அசம்பாவிதத்தில் அகாலமரணமடைந்த நா. சண்முகம் (காரை நகர்) அவர்களை நினைவு கூர்ந்து மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் ஒரு செபக்கூட்டம் 29 - 06 97 இல் நடைபெற்றது. அருள்திரு ஏ. எஸ். ரி. ஆனந்தன் செபக கூட்டத்தினை நடாத்தினார். அருள்திரு ஏ. வி. யேசுதாசன் செபத்தில் வழி நடாத்தினார். சகோ. ஈனோக் புனிதராசா வேதப் பாடம் வாசித்தார்.

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷ அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.